# தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம் எசன்

# TAMILISCHER SPRECHDIENST UND KULTURVEREIN E.V




# எசன் தமிழ் பாடசாலை 10வது ஆண்டு மலர்

# ESSENER TAMIL SCHOOL 10 JARES FESTZEITSCHRIFT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற கீதம்

மொழியும் கலையும் கல்வியால் விளங்க
முத்தமிழ்தனை மூச்செனக் கொண்டு இசை
மொழி நடைப் பள்ளிகள் நடத்தும் எசன்
தமிழ்மொழிச் சேவை மன்றம் வாழியவே

பன்மொழி பல்கலை பயில் பண்பாடுகள்
பாவலர் நாவலர் விஞ்ஞானிகள் மலிய
பாடுபடு மெசன் தமிழ் மொழிச்சேவை
கலாச்சாரமன்றம் வாழ்க வளர்க வாழியவே

உண்மை நேர்மை ஒற்றுமை வேண்டி
ஊக்கம் ஆக்கம் உயர்வதை நாடி
தமிழ்நலம் பொதுநலம் மானுடம் பேணி
தாரணி யதனில் என்றென்றும் வாழியவே

நீள்புவி கோளெங்கும் நீண்டு பருத்து
வாள்போல் கூராய் அறிவை வளர்த்து
வானென உயர்ந்து வரையென நிலைத்து
வரலாறுகள் படைத்து வளத்துடன் வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

தாய் மொழிக் கல்வி அவசியம் என்பதைக் கூறும் அறிஞர்களைக் காட்டிலும் அதை நடைமுறைப்படுத்த உதவுபவர்களும் பாடுபடுபவர்களுமே உண்மையானவர்கள். போர் நடைபெறும் நாடுகளிலும் புலம்பெயர் நாடுகளிலும் தாய்மொழிக் கல்வி பேணப்படும் வாய்ப்புகள் அரிது. அதிலும் புலம்பெயர் நாட்டில் இம்முயற்சி கல்லிலே நார் உரிப்பது போல் ஆகும். இருப்பினும் காலத்தின் தேவை கருதி அவ்வாறு செயற்படும் அத்தனை பாடசாலைகளும் போற்றப்பட வேண்டியவைகளே.

இன்று 10வது ஆண்டின் நிறைவு விழாவைக் கொண்டாடும் எசன் தமிழ் பாடசாலை 1988ம் ஆண்டு யூன் மாதம் தொடங்கப்பட்டது. 9 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று அதன் 9 மடங்கு மாணவர்களுடன் இயங்குகிறது. பாலர் வகுப்பிலிருந்து 9ம் ஆண்டுவரை மாணவர்கள் பயில்கிறார்கள். சங்கீத; பரதநாட்டிய வகுப்புகளும் நடைபெறுகின்றன.

இலங்கைப் பாடத்திட்டத்திற்கமைய தமிழ் மொழிக்கல்வி போதிக்கப் படுகின்றது. இம்மாணவர்கள் ஜேர்மன் தமிழ் கல்விச் சேவையினரால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி நல்ல பெறுபேறுகளையும் சான்றுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளார்கள். மொழிவளர்ச்சி கருதி ஆண்டுதோறும் பேச்சுப்போட்டிகள் நடைபெறும். கலை கலாச்சாரங்களைத் தெரியப்படுத்த கலைவிழாக்கள் நவராத்திரி விழாக்களை நடத்தி வருவதுடன் விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்துகிறோம்.

எசன் மாநகரில் நடைபெறும் வெளிநாட்டவர்கள் விழாக்கள்; மேதின விழாக்கள் 'எசன் ஒரிஜினல்' 97; 98 போன்ற கலாச்சார நிகழ்ச்சிகளிலும் எமது மாணவர் பங்குபற்றிச் சிறப்பித்து பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்கள். இதன் மூலம் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நட்பையும் வளர்க்கப் பாடுபடுகின்றோம்.

இதன் ஆரம்ப காலத்தில் இது இப்படி வளரும் என்று எதிர்பார்க்கவில்லை. காரணம் எந்த நேரமும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சஉணர்வு. இப் பாடசாலை ஆரம்பமாவதற்கு ஆலோசனைகளும் இடவசதிகளும் ஒத்துழைப்புகளும் உதவிகளும் நல்கி பக்கத்துணையாக நின்றவர்கள் **PSZ** அமைப்பும் **Diakoniewerk Essen** அமைப்புமே. இன்றும் எமது பாடசாலை அன்று ஆரம்பிக்கப்பட்ட அதே இடத்தில் இயங்கிவருகிறது. ஆகவே அவர்கள் என்றென்றும் நினைவில் கொள்ளப்படவேண்டியவர்களே.

எமது 10 ஆண்டின் செயற்பாடுகளையும் மலராக்க இந்த 10 ஆண்டுகளும் எங்களுடன் இணைந்து செயற்பட்ட பெரும்பாலானவர்களின் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் எமது மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்வுகளின் ஆரம்ப காலப் பங்குகளிலிருந்து இன்றுவரையான சில நினைவுகளையும் இதழ்களாக்கி இம் மலரை மலரவைத்துள்ளோம். இப் பாடசாலைக்கு விழாவெடுக்கும் எசன் தமிழ் மொழிச் சேவை கலாச்சார மன்றமும் இப் பாடசாலையின் படிமுறை வளர்ச்சியின் பரிணாமமே. அதனால் இப் பாடசாலையின் விழாவைக் கொண்டாடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

" இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமெனும் நல்லாள் நகும்."

24.10 98.

தமிழ் மொழிச் சேவை கலாச்சார மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Helga Iwer
Münstermannstr. 22
~~4300~~ Essen ~~11~~
Tel: 69 o9 34
45357 Essen
Mitglied der SPD-Fraktion im Rat der Stadt Essen
Vorsitzende des Sozialausschusses

Essen, den 25.9.98

Herrn
Arumugam Velautham
Mittwegstr.21
45127 Essen

Sehr geehrter Herr Velautham,

inzwischen hat mich Ihr Fax erreicht und ich habe auch mit Herrn Schwinn gesprochen.
Für Ihre Jubiläumsfestschrift sende ich Ihnen die folgenden Grußworte:

Wenn Menschen aus ihrer Heimat flüchten müssen, erfahren sie ein schweres Schiksal.
Sie kommen in ein fremdes Land mit anderer Sprache, unbekannter Kultur , fremden Sitten und Feiertagen.
Dabei ist es von großer Bedeutung, sich mit allen diesen Fakten des neuen Lebensbereiches zu befassen und so weit wie möglich anzupassen.
Allerdings darf dabei die persönliche Beziehung zur eigenen Muttersprache und Heimatkultur nicht vergessen werden und verloren gehen.
Die "Essener Tamil School" erfüllt die Aufgabe, Heimatsprache und Kultur lebendig zu erhalten, seit 10 Jahren in vorbildlicher Weise. Den Lehrern und Organisatoren gebührt daher Dank für ihr ehrenamtliches Engagement im Interesse der Kinder, Jugendlichen und Familien aus Sri Lanka. Diese Arbeit hat auch positive Auswirkungen auf ein friedliches Leben miteinander in unserer Stadt Essen.
Zum Jubiläumsfest der "Essener Tamil School" möchte ich daher herzlich gratulieren und uns allen eine gute und friedliche Zukunft wünschen.

Helga Iwer

(Vorsitzende des Sozialausschusses im Rat der Stadt )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Kalai Vilakku"*
S. Packiyanathan B.A.
Droote 19
44328 Dortmund
Germany

## ஆசிச் செய்தி

தாயகத்தைத் தாண்டிப் புலம் பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கின்ற எம்மவர்கள் நமது மொழி; கலாச்சாரம்; கல்வி; பண்பாடு என்பவற்றை இயன்றவரை போற்றிக் காத்து வளர்த்து வருகிறார்கள் என்பதை எண்ணி மிகப் புளகாங்கிதம் அடைகின்றோம். அதேவேளை தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் ஒலித்திட வேண்டும் என்ற பாரதியாரின் கனவு நிஜமாகி வருவதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும்.

இன்று ஜேர்மனியைப் பொறுத்தவரையில் தமிழ்மொழிக்கல்வி; பரதக்கலை; இசைக்கலை; சமயம் என்பவற்றைத் தாம் சென்ற இடமெல்லாம் வளர்த்து வரும் எம்மவர் முயற்சிகளின் ஒன்றாக எசன் தமிழ் மொழிச் சேவை கலாச்சார மன்றம் தொண்டாற்றி வருகின்றது.

அந்நிய நாட்டினிலே பலவகைப்பட்ட; பலதரப்பட்ட தடைகளை எதிர்நீச்சல் அடித்து பத்து ஆண்டு களைத் தாண்டி வெற்றி நடைபோடும் தமிழ் மொழிச் சேவை கலாச்சார மன்றம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று பல்லாண்டு நிறைவு நாளைக் கொண்டாட வேண்டும் என வாழ்த்துகிறோம். எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான் என்ற பொன் மொழியின் பொருள் உணர்ந்து; எம்சிறார்கள் வாயினிலே தமிழ் மொழி தாண்டவம் புரிய அருஞ்சேவை ஆற்றிவரும் தமிழ் மொழிச் சேவை கலாச்சார மன்றத்தினரையும் நாம் பாராட்டி எமது ஆதரவையும் வழங்குகின்றோம்.

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ்ப்பணி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

stadt essen
Der Oberstadtdirektor

Dezernat für Kultur und Bildung
Schulverwaltungsamt

Stadt Essen - Stadtamt 40-8/RAA - Tiegelstr. 27 - 45141 Essen

Frau
Velautham Arumugam
Mittwegstr. 21
45127 Essen


RAA
Regionale Arbeitsstelle zur Förderung von Kindern und Jugendlichen aus Zuwandererfamilien
Tiegelstr. 27
45141 Essen
Durchwahl: (0201) 8328-
Sekretariat: (0201) 8328-401
Fax: (0201) 8328-333

Datum und Zeichen Ihres Schreibens

Auskunft erteilt:
Tel.: 8328-

Essen, den 09. Sep. 98

# Die „Essener Tamil School" feiert ihr 10-jähriges Bestehen, dazu gratuliert die RAA ganz herzlich!



Grund zu feiern ist aus Sicht der RAA vor allem das Engagement der „Essener Tamil School", die tamilische Sprache und Kultur in der Migration weiterleben zu lassen und sie den hier aufwachsenden Kindern zu vermitteln.

Oft hört man, es sei schlecht, wenn Kinder mehrere Sprachen sprechen, sie bringen die Sprachen durcheinander oder lernen so keine Sprache richtig. Das sind Vorurteile und ist falsch. Auch kleinere Kinder können gut mit mehreren Sprachen zurechtkommen und lernen schnell, die verschiedenen Sprachen voneinander zu trennen. In der Familie ist die Muttersprache nicht nur ein Mittel der Verständigung, sondern schafft auch Vertrauen und Geborgenheit. Dies sind wichtige Bedingungen für die soziale und intellektuelle Entwicklung des Kindes. Es ist wissenschaftlich erwiesen: Kenntnisse in der Muttersprache sind kein Hemmnis, sondern eine große Hilfe für das Erlernen der deutschen Sprache. Je besser Kinder ihre Muttersprache beherrschen, desto besser können sie eine zweite Sprache lernen.

Die RAA Essen begrüßt und unterstützt deshalb die Aktivitäten der „Essener Tamil School" und wünscht den Kindern, ihren Familien und den engagierten Lehrern weiterhin eine erfolgreiche Arbeit.

Dr. Helmuth Schweitzer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்

கலை, இலக்கிய, சமூக இருமாதஇதழ்
"MANN"(ERDE) Tamilisches Magazin für
Kultur, Literatur und Soziales

V. Sivarajah
Angertaler str 98
47249 Duisburg
Germany
Tel 0203-706480

Date:

## வாழ்த்துகிறோம்!.......

ஜேர்மனி - எசன் தமிழ்மொழிச்சேவை தமிழ்ப்பாடசாலையின் பத்தாவது ஆண்டுநிறைவு கண்டு மகிழ்கிறோம். வாழ்த்துகிறோம்.

ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுடன் கல்வி, சுதந்திரம், அமைதி என்பனவும் அத்தியாவசியமானதாகும். இந்த வகையில் புலம்பெயர்ந்த நாடொன்றில் கடந்த பத்தாண்டுகளாக கல்விப்பணியை சிறப்புடன் செய்துவரும் இக்கல்வி நிலையத்தின் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் பாராட்டுவதில் மகிழ்கிறோம்.

அந்நிய சூழல், அந்நிய கலாச்சாரம், அந்நிய மொழி போன்ற பல இடையூறுகளின் மத்தியிலும் நம் தமிழ்மொழியை நம் சிறார்களுக்கு புகட்டி எமது மொழியை, எமது கலாச்சார பாரம்பரியங்களை பாதுகாத்துவரும் எசன் மாநகர தமிழ்ப்பாடசாலை மேலோங்கி வாழ்க!.......... வளர்க!.......... என வாழ்த்துகிறோம்.

**„கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றையவை"**

**~குறள்~**

வி. சிவராசா
8/10/98
ஆசிரியர்
„மண்" சஞ்சிகை

**08.10.1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Caritasverband für die Stadt Essen e. V.

Caritasverband für die Stadt Essen e.V. · Postfach 10 07 31 · 45007 Essen

Tamilischer Sprachdienst
und Kulturverein
Herrn Velautham Arumugam
Mittwegstr. 21
45127 Essen

Sachgebiet:
Flüchtlingshilfe
Niederstraße 12-16
Franziska-Schervier-Haus
45141 Essen
Telefon (0201) 32003-0
Telefax (0201) 32003-70

16. 08. 1998

Sehr geehrter Herr Velautham Arumugam,

zum bevorstehenden 10jährigen Bestehen des Vereins Tamilischer Sprachdienst - und Kulturverein gratuliere ich Ihnen, Ihrer Gattin sowie allen Mitgliedern des Vereins ganz herzlich.

Der Verein hat in den zurückliegenden Jahren mit seinen Aktivitäten viel dazu beigetragen, den tamilischen Kindern, die hier in Deutschland aufwachsen und die ihre ursprüngliche Heimat praktisch nur durch die Erzählungen der Eltern kennen, durch Vermittlung von tamilischer Sprache und Kultur ein Stück eigener Identität zu geben und das Gemeinschaftsgefühl zu stärken.

Für Ihre weitere Arbeit wünsche ich Ihnen viel Freude und Erfolg.

i. A. Fürtges, Dipl.-Sozialarbeiter

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Rottstr 9 இல்
ஆரம்ப எசன்
தமிழ்
பாடசாலை
1989



Rottstr 9 இல்
ஆசிரியரும்
மாணவர்களும்
1990



மாணவர்கள்
சுற்றுலாவில்
ஆசிரியர்களுடன்
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Diakoniewerk
Essen
II. Hagen இல்
நடந்த வகுப்பு
1991.



எசனில்
நடந்த
சித்திரைப்
புத்தாண்டு
நிகழ்ச்சி
1992




நவராத்திரி
வழாவில்
பாடசாலை
மாணவிகள்
05.10.1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதம
விருந்தினர்
Herrn Hans
Schippmann
Vorsitzender
des Schulaus-
schustes im
Rat der Stadt
Essen
25.09.93




கலைவிழா
நகழ்ச்சி
25.09.93.




கலைவிழா
நிகழ்ச்சி
25.09.93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன்
பாடசாலை
நிக்ச்சியில்
எமது
பாடசாலை
மாணவிகள்
1993.



பிரதம
விருந்தினர்
Vertreter
der
Caritas-
verband
1994.






எசன் தமிழ்
பாடசாலை
கலை விழா
25.09.93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதம
விருந்தினர்
Frau
C. Zwanzer
Vertreter der
Geschäftsstelle
des
Ausländer-
-beirates
21.10.95.





7வது ஆண்டு
நிறைவுவிழா
கலைநிகழ்ச்சி
21.10.95



கலை விழா
நிகழ்ச்சி
17.09.94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை நிகழ்ச்சி 21.10.95.





கலை நிகழ்ச்சி 21.10.95.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலை நிகழ்ச்சி 21.10.95.




கலை நிகழ்ச்சி 17.09.94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை நிகழ்ச்சி 21.10.95.




பிரதம விருந்தினர் Frau Ingrid Vogt. Vertreter der RAA
தமிழ் பேச்சுத்திறன் போட்டி 18.05.96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணிவிழா 19.10.96.





ஈசன் சிவசுப்பிரமணியசுவாமி ஆலய 10வது ஆண்டு நிறைவு விழாவில் எமது சிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் பேச்சுதிறன் போட்டியில் எமது பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் 23.05.98.



ஜேர்மன் தமிழ் கல்விச் சேவை பரிசளிப்பு விழாவில் எமது சிறார்கள் 1996.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மங்கள விளக்கேற்றல் Vertreter der RAA 21.10.95




வாணிவிழா 11.10.97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசன் தமிழ் மொழிச் சேவை நின்று நிலைத்து வாழும்

எந்த மொழியையும் படித்து பாண்டித்தியம் பெறுவதில் தவறில்லை. ஆனால் சொந்த மொழியை மறப்பதில் தவறுண்டு. ஒரு மொழி அழியின் ஓர் இனம் அழியும். தமிழ் தெரியாத தமிழர்கள் உலகில் பல இடங்களில் வாழ்கிறார்கள். அது தவறு என்பதை உணர்ந்து தற்போது தமிழ் மொழி கற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். இலங்கையில் இருந்து தவிர்க்க முடியாத காரணங்களால் இங்கு வந்த நம்மில் பலர் எதிர்காலம் ப்ற்றி யோசிக்காமல் வாழ்கின்றோம். மேலும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியநிலை. மேலோட்டமாகப் பார்த்தால் மகிழ்ச்சி போல் தோற்றமளிக்கும். இது ஒரு மாயை வாழ்க்கையென்று பலர் அலுத்துக்கொண்டதை நாம் அறியாமலில்லை. அப்படியானால் எதிர்காலம். திரும்பவும் ஒருநாள் தாய்நாடுதான் என்கிற முடிவு மாற்றமில்லாத தொன்றாகும். இந்த அடிப்படையில் இங்கு வாழ்கின்ற சிறார்களின் வாழ்க்கையில் எமது தமிழ் மொழி அறிவின் அவசியம் முக்கியமாகின்றது.

புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற பல சமுதாய நலம்விரும்பிகளின் முயற்சியால் கல்வி நிலையங்கள் பல உருவாகி செயற்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். இந்தச் சேவையில் இன்று 10வது ஆண்டு நிறைவை மனமகிழ்வோடு வெற்றி நடையோடு கொண்டாடும் எசன் தமிழ் மொழிச் சேவையை மறந்து விடமுடியாது. இவ்வமைப்பு கடந்த காலங்களில் செயற்பட்டதையும்; ஆண்டுதோறும் நடாத்தி மகிழந்த ஆண்டுவிழாக்கள்; பரீட்சைகள் அதன் முதற்தர பெறுபேறுகள்; அனைத்தையும் நேரில் கண்டுகளித்து பெருமைப்பட்டவன் என்றரீதியில் 10வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இந்த மலரில் இதனை உங்களோடு சேர்ந்து பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புலம்பெயர் சிறார்களின் எதிர்கால நல்வாழ்க்கைக்கு உதவும் வகையில் இதற்கென வெகு நேரத்தை ஒதுக்கி சேவை இது தேவை யெனநினைத்து செயற்பட்டு வரும் திரு; திருமதி வேலாயுதம் தம்பதிகளையும் ஏனைய ஆசிரியர்கள்; பெற்றோர்கள்; நிலைய அமைப்பாளர்களையும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

சென்ற இடங்களில் தமிழ் அறிவையும் கலைஞானத்தையும் இசையாக; கதையாக; பேச்சுத்திறனாக; அபிநயமாக; நடனமாக; ஓவியமாக அள்ளித் தெளிக்கும் இப்பாடசாலை மாணவர்களையும் இந்த இடத்தில் நினைத்துமப் பார்க்கிறேன். அருமை. இக்கல்விச் சேவை நிலைத்து நின்று நீடு வாழும். இதற்கென எனது வாழ்த்துக்கள் தொடரும்.

நன்றி

28.09.98

பொன். புத்திசிகாமணி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Herzlichen Glückwunsch!

Es ist eine mühsame Arbeit, kleinen Kindern Unterricht zu erteilen. Diese Arbeit ist noch mühsamer bei Kindern, die in Deutschland geboren worden sind und in ihrer Muttersprache unterrichtet werden müssen. Die Kinder, die hier geboren sind, können die höheren Belastungen, wie sie bei unseren Sprachen erwartet werden, nicht ertragen. Außerdem kann man die Kinder nicht unter den gleichen Verhältnissen, wie man sie aus der Heimat kennt, unterrichten. So braucht ein Lehrer, der diese Aufgabe übernommen hat, eine Engelsgeduld, den Kindern den Stoff beizubringen. Man muß, um Kinder hier zu unterrichten, üblicherweise pädagogische Fähigkeiten besitzen. Die Familie Velautham hat nicht nur für ihr Leben sondern auch für das Leben vieler Kinder einen großen Beitrag geleistet. Wenn man in der Heimat ist, ist einem nicht klar, wie wichtig einem die Muttersprache und die eigene Kultur ist. Mir zumindest ist es so ergangen, daß ich im Ausland verzweifelt auf der Suche nach meiner Sprache und Kultur war. Es ist sehr schwer, in einem Staat zu leben, in dem die Freiheit an erster Stelle steht, und dabei unseren Kindern das Hergebrachte aus unserer Kultur nahezubringen und beizubringen. Die tamilischen Kinder haben aber bei diesem Sprachangebot gehorsam und willig aufgepaßt und gelernt. Bei der letzten tamilischen Jahresprüfung habe ich selbst gestaunt, welch eine Qualität und großes Wissen die Kinder, die die Muttersprache wie eine Fremdsprache lernen und beherrschen müssen, haben.

Ich staune auch über Herrn und Frau Velautham und die Komittee-Mitglieder. Man hat nicht genügend finanzielle Mittel, und die Mitglieder dieses Vereins sind auch nicht sehr reich. Von den gespendeten Geldern wird dieser Unterricht zum großen Teil ehrenamtlich erteilt. Mittel vom Land oder der Kommune gibt es für diesen Unterricht nicht. Wen interessiert schon diese Sprache? Warum sollen Land und Bund dies fördern? Ich hoffe schon, daß eines Tages muttersprachliche Lehrer für Tamil, wie auch für Türkisch, Albanisch u.a., an unseren Grundschulen unterrichten.

Ein weiterer Gesichtpunkt begeistert mich ebenfalls, nämlich daß man nicht unterscheidet nach der Zugehörigkeit zu politischen Parteien. Der andauernde Krieg in der Heimat und die stete Flucht in alle Welt hat der Welt einen Eindruck gegeben, daß wir Tamilen alle einer terroristischen Vereinigung angehören und sehr militante Gruppen seien, weil wir ein agressives Volk sind. Ich erlebe fast täglich, daß hierdurch viele meiner Landsleute sich zurückgezogen haben und einsam nur für sich leben. Sie haben Angst, sich mit anderen Landleuten groß zu unterhalten, da man nie weiß, zu welcher Gruppe der andere gehört. Familie Velautham hat von diesem Konflikt die Kinder in keiner Weise etwas spüren lassen sondern immer nur darauf geachtet, Unterricht als Sprache zu überbringen. Ich bin sehr glücklich darüber, daß in der Gemeinde in Essen so viele Zuneigungen und so viel Verständnis und Miteinander unter den Tamilen bestehen, und daß sie helfen, den Unterricht fortzuführen.

Glück auf!

A. Ragunathan
Dolmetscher und Übersetzer

Mülheim a.d.Ruhr, den 14.9.1998

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தினேஷ் மார்க்ட்

## எசன்-ஜேர்மனி

எசன் நகரில் தொடர்ந்து பத்து வருடங்களாக
தமிழ் சிறார்களின் மொழியறிவை விருத்தி
செய்ய வேண்டும் என்கின்ற நல் நோக்கோடு
பணியாற்றிவரும் எசன் தமிழ் மொழிச்சேவை
அமைப்பினை நாம் பாராட்டுகின்றோம்.எசன்
தமிழ் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திருந்து
பல்வேறு கஸ்ரகரமான சூழ்நிலைகளின் மத்தியில்
படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று பத்தாவது
ஆண்டு விழாவை கொண்டாடுகின்ற தென்றால்
அதற்கு காரண கர்த்தாவாக அமைந்த இப்
பாடசாலை இயக்குனர்கள் திருதிருமதி.வேலாயுதம்
அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.
இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும்
இந் நாட்டிலே பல்வேறு சூழ் நிலைகளின்
மத்தியிலும் தாய் மொழியின் முக்கியத்துவத்தையும்
முதன்மையையும் அறிந்து கல்விச்சேவைக்கென்று
காலத்தையும் நேரத்தையும் ஒதுக்கி பணி
செய்து வரும் சேவையை இந்நேரத்தில் நாம்
பாராட்டுகின்றோம்.
கல்விச் சேவையோடு தமிழ் கலை கலாச்சாரங்களை
மாணவர்களின் மத்தியில் புகுத்தி தமிழுக்கும்
தமிழ் மாணவர்கட்கும் சேவை செய்து வரும்
இவ்வமைப்பு இன்னும் பல வருடங்கள் வளர்ச்சி
கண்டு வெள்ளி விழா, வைர விழாக்களை சந்திக்க
வேண்டும் என்று இப் பத்தாவது ஆண்டு விழாக்
காணும் இந்நேரத்தில் நாம் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்க தமிழ் வளர்க தமிழ் உணர்வு

மளிகைப் பொருட்கள் புடவை வகைகள், வீடியோ பிரதிகள், தொலை பேசி அட்டைகள், அன்பளிப்புப் பொருட்கள் மரக்கறி வகைகள், கடலுணவு வகைகள் அனைத்தையும் தரமானதாக பெற்றுக்கொள்ளவும் வாரத்தில் இரு நாட்கள் சிகையலங்காரம் செய்யவும் ,தங்க நகைகள் திருத்தவேலைக்கும், அனைத்து நிகழ்சிகளை வீடியோ மற்றும் நிழற்படம் பிடிக்கவும் கதிரைகள் அடுப்புகள் ,பாத்திரங்கள் ,மண்டபசோடினைகள் ,வாடகைக்கு விடவும் ருசிமிக்க உணவுவகைகள் ஓடர் செய்து தரவும் எசன் நகரில் நாடுங்கள்

**தினேஷ் மார்க்ட்**
கஸ்ரானியன் அலே-38
45127 எசன்
தொ.இல.0201-200559-230186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ESSENER SPORTBUND e.V.**
*Perspektiven im Essener Sport*

Essener Sportbund e. V., Postfach 10 36 28, 45036 Essen

An den
Tamilischen Sprachdienst und Kulturverein
für die Festschrift 1998

Haus des Sports
Steeler Straße 38, 45127 Essen

Telefon (02 01) 81 46 - 0
Durchwahl (02 01) 81 46 -
Telefax (02 01) 81 46 109

Geschäftszeiten:
Mo., Mi., Do.: 8.00 – 16.30 Uhr
Di.: 8.00 – 18.00 Uhr
Fr.: 8.00 – 13.00 Uhr
Mittagspause: 12.30 – 13.00 Uhr

Essen, den 3.9.98

Sehr geehrte Damen und Herren,

der Essener Sportbund e.V. freut sich, auf eine langjährige Zusammenarbeit mit dem Tamilischen Sprachdienst und Kulturverein zurückblicken zu können.
Denn durch dieses gemeinsame Engagement konnten zahlreiche Tamilen für die sportliche Aktivität gewonnen werden.
Selbstverständlich steht der Essener Sportbund e.V. dem Tamilischen Sprachdienst und Kulturverein weiterhin auch für die Zukunft mit Rat und Tat zur Seite.
Jeder Bürger, der sich sportlich betätigen möchte, ist beim ESPO herzlich willkommen. In Essen stehen 650 Vereine mit einem umfangreichen Sportangebot zur Verfügung, und jeder Verein freut sich über neue Mitsportler.
Sonst gibt es noch die Möglichkeit, in einem der zahlreichen Sportkurse des Bildungswerkes des Landessportbundes NW e.V. hier in Essen neue Sportarten zu erproben.
Der Essener Sportbund möchte jeder Essener Bürgerin und jedem Bürger die Möglichkeit einräumen, sich aktiv mit einem Sportangebot für die Gesundheit einzusetzen.
Für Rückfragen steht Ihnen gerne Frau Reinders unter der Telefonnummer: 8146-104 und die Zentrale mit der Telefonnummer: 8146-0 zur Verfügung.

An dieser Stelle ein herzliches Dankeschön an die Eheleute Velautham, die mit ihrem unermüdlichen Einsatz diesen Verein tragen.

Mit den besten Wünschen für die Zukunft

Günter Kropp
(Geschäftsführer)

L. Rastelli
Livia Rastelli
(Sport mit Migranten)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Grußwort der Geschäftsstelle Ausländerbeirat der Stadt Essen**

Anläßlich des 10jährigen Bestehens des Vereins **Tamilischer Sprachdienst- und Kulturverein e.V.** möchte ich Ihnen heute herzliche Glückwünsche der Geschäftsstelle Ausländerbeirat übermitteln.

In den 10 Jahren seines Bestehens ist der Verein Tamilischer Sprachdienst- und Kulturverein von einer kleinen Gruppe zu einem aktiven Verein gewachsen.
Die Geschäftsstelle Ausländerbeirat begrüßt und unterstützt die Arbeit der ausländischen Vereine in Essen, da hier eine wichtige Funktion für die Mitglieder gesehen wird. Durch eine solche Arbeit ist es möglich, sich mit Landsleuten zu treffen, gemeinsame Freizeit zu gestalten, Kindern ihre Muttersprache näherzubringen, Traditionen zu pflegen, Informationen über das Herkunftsland und das Leben in der Bundesrepublik auszutauschen und etwas über die eigene Kultur zu vermitteln.
Vereinsarbeit hat also einen hohen Stellenwert für die Wahrung und Vermittlung der eigenen Kultur, sowie für die Identitätsfindung der einzelnen Mitglieder.
Auch der Austausch mit ausländischen Vereinen anderer Herkunftsländer war und ist ein wichtiger Teil der Arbeit. Hier gab es viele Kontakte bei Kulturfesten und anderen Veranstaltungen.

Seit 1993 besteht die Zusammenarbeit der Geschäftsstelle Ausländerbeirat mit dem Tamilischen Sprachdienst- und Kulturverein e.V.
Von Anfang an war eine der großen Schwierigkeiten die Suche nach geeigneten Räumlichkeiten für die Sprachkurse der Kinder und auch jetzt ist die Raumsituation immer noch nicht optimal. Neben dem Sprachunterricht gab es viele andere Aktivitäten, wie z. B. Sportfeste, Kulturfeste und Sprachwettbewerbe, daneben auch eine rege Beteiligung bei größeren städtischen Veranstaltungen wie Internationales Kulturfest, Essen Original und vieles mehr.

Zum 10jährigen Bestehen des Vereins soll besonders Frau und Herrn Velautham recht herzlich für ihr unermüdliches ehrenamtliches Engagement sowie für die gute Zusammenarbeit mit der Geschäftsstelle Ausländerbeirat gedankt werden.
In Ihrem Verein wird eine wichtige Arbeit geleistet, die tamilischen Kindern dabei hilft, ihre Identität zu entwickeln und dabei etwas über beide Kulturen – die tamilische und die deutsche – zu lernen.

Viel Erfolg für die zukünftige Arbeit und auf eine weiterhin gute Zusammenarbeit,

**Ihre**
**Geschäftsstelle Ausländerbeirat der Stadt Essen**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

இந்த பேருண்மையை புலம்பெயர் நாட்டிலும் நிலைநாட்டி; ஈரைந்து ஆண்டுகளாய் இடையறாது இன்பத் தமிழ் போதித்து இன்று விழாக்காணும் எசன் தமிழ் பாடசாலை இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு பணிசெய்து வாழியவே என வாழ்த்துகிறோம்.

கிறீன்லன்ட் றேடேஸ்

தரமான தங்க நகைகளை நியாயமான விலையில் பெறவும்;

உடைந்த நகைகளை மாற்றி புது நகை பெறவும்;

நகைத் திருத்த வேலைகள்;

மளிகைச் சாமான்கள்;

வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான தொலைபேசி அட்டைகள் (காட்)

குறிப்பிட்ட தொகைக்குமேல் வாங்குபவர்களுக்கு கழிவுகள் கிடைக்க

நாடுங்கள்.

GREENLAND TRADERS

Besing str 12A
45141 Essen
Germany
Tel.> 0201- 321288


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Evangelische Kirchengemeinde Essen-Altstadt-Mitte

Pfarrer Steffen Hunder, Tiegelstraße 19, 45141 Essen, Telefon: 0201 / 31 32 19


Essen, 14. September 998

An den
Tamilischen Sprachdienst und Kulturverein
Velautham Arumugam
Mittwegstr. 21

45127 Essen

Betreff
10-jähriges Bestehen der „Essener Tamil School"

Sehr geehrter Herr/Frau Arumugam !

Hiermit bedanke ich mich für Ihr Schreiben vom 12.08.1998.

Hiermit übersende ich Ihnen die Grußbotschaft unserer Kirchengemeinde anläßlich Ihres Jubiläums:

> Seit Jahren bewundern wir Ihren großartigen Einsatz im Dienst an den Kindern Ihrer Landsleute. Es ist von großer Wichtigkeit die Muttersprache und Kultur seines Heimatlandes in der Fremde kennen zu lernen.
> Wir wünschen Ihnen für Ihre Arbeit weiterhin gutes Gelingen und Gottes Segen.

Mit herzlichen Grüßen verbleibe ich
Ihr

Steffen Hunder

(St. Hunder, Pfr.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலை மன்றம்
## நொய்ஸ்

MUTHTHAMIL KALAI MANTRAM.

POST FACH : 10 13 06
41413 NEUSS.


**வாழ்த்துச் செய்தி** — ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு —

தாய் நாட்டில் இருந்து இளைஞர்களாகவும் யுவதிகளாகவும் இடம் பெயர்ந்தவர்கள் - புலம் பெயர்ந்த மண்ணில் யதார்த்த வாழ்வில் புகுந்தனர், இளைய தலை முறை துளிர் விடத்தொடங்கியது. அதனை அடுத்து எமக்கு ஒரு தேவையும் காத்திருந்தது. இன உணர்விலும் தமிழ் மொழி வளத்திலும் பற்றுக் கொண்டவர்கள் ஆங்காங்கே தமிழ் மொழிப் பாடசாலைகளையும், கலை, இலக்கிய மன்றங்களையும் பகீரதப்பிரயத்தனங்களினூடே தோற்றுவித்தனர். அவற்றின் மூலம் பழந்தமிழர் இலக்கியங்களும் காவியங்களும் - மண்ணின் மணமும் இளைய துளிர்களுக்கு எடுத்தியம்பும் யோகம் இல்லாத பாகம் காத்திருந்தது.

தமிழ் மொழித்திறன், அருங்கலைத் தகுதிகள் புலம் பெயர்ந்த நாடுகளில் - சுய பொருளாதார மேம்பாட்டிற்கான நல்ல வருவாய்த் துறையாகவே பார்க்கப் படுகின்ற இந்த நாட்களில், தன்னலம் கருதாத தனி மனிதக்கருத்துக்களின் கூட்டு முயற்சியே எசன் தமிழ் பாடசாலை எனலாம். திரு.திருமதி வேலாயுதம் அவர்களின் அயராத உழைப்பில் கடந்த 10 வருடங்களாக, இந் நிறுவனம் ஏறத்தாழ 90 எண்ணிக்கையிலான சிறார்களுக்கான கற்கை நெறிகளைப் பயிற்றுகின்றது என்றால் - அதுவும் புலம் பெயர்ந்த மண்ணில், ஒரு சோதனையான சாதனை முயற்சி என்றுதான் குறிப்பிட வேண்டும். நமது இனத்தின் - மொழியின் விடுதலைப் போரிற்கு அரண் சேர்க்கும் ஓர் அறவழிப் போராட்டம் தான் எசன் தமிழ் பாடசாலையில் நடைபெறுகின்றது என்றால் அது மிகையாகாது.

இப் பாடசாலையானது தனது தொண்டினை குறுகிய வட்டத்தினுள், எசன் மாநகரோடு நின்றுவிடாது நகரிற்கு வெளியில் வேற்று மாநிலங்களிலும், நகர்களிலும் நடக்கும் தமிழ் திறன் போட்டிகளுக்கு நடுவர்களாகவும் நடத்துனர்களாகவும் சென்று தொண்டாற்றி வருகிறது.

குறிப்பாக பாடசாலை அதிபர் திரு. வேலாயுதம் அவர்களும் அவர் தம் துணைவியாரும் ஏனைய ஆசிரியர்களும் கடந்த ஆறு வருடங்களாக பிரதி வருடமும், எமது முத்தமிழ் கலை மன்றத்தினரால் நடாத்தப்படும் திருக்குறள் மனனப் போட்டியும் - திறனாய்வுப் பரிசுப் போட்டிகளிலும் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் பங்கேற்றுப் பணிசெய்து வருவது மேற்சொல்லப் பட்ட கருத்திற்கு உதாரணக் குறிப்பாக அமையும். எசன் தமிழ் பாடசாலையினர் வீட்டிலும் வெளியிலுமாகச் செய்கின்ற பணிகள் புலம் பெயர்நத மண்ணில் தமிழ் தொண்டு என்கின்ற தலைப்பின் வரலாற்று மீளாய்வில் நன்மதிப்போடு நோக்கப்படும் என்பது திணம்.

சுவை தரும் கனிகளைச் சுமந்து ஊரின் நடுவே நிற்கும் மரத்திற்கு என்ன நடக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அதுவும் 10 வருடங்களாக சுவை தரும் கனிகளை - தமிழ் எனும் அமிழ்தச் சுவையினைத் தருகின்ற - உங்கள் கனிகளுக்கு ஊட்டம் தருகின்ற இந்தக் கற்பகதருவான எசன் தமிழ் பாடசாலைக்கு கல்லும் சொல்லும் வீசாது காத்து நின்றால், ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி, புலம் பெயர்ந்த மண்ணில் இலக்கியம் படைக்குமென்பதில் ஐயமில்லை எனக்கூறி அதுவே முத்தமிழ் கலை மன்றத்தின் வாழ்த்துமாகி நிற்கிறது.

சுபம்

தி. லோகசிங்கம்

செயலர்,முத்தமிழ் கலை மன்றம்
நொய்ஸ்,10.09.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**GRUßWORT**

von der **Schülerschule** Essen -West zum 10-jährigen Bestehen der **Essener Tamil-School**

Wir leben in einer Zeit, die nur noch wenig m e n s c h l i c h e n Maßstäben entspricht. An unseren Mitbürgern, die aus anderen Ländern zu uns kommen mußten, und da vor allem an den Jugendlichen können wir dieses Mißverhältnis deutlich erkennen.

Die Seele hat Bedürfnisse; bleiben diese unbefriedigt, so befindet sich der junge Mensch in einem ähnlichen Zustand wie ein Verhungernder.
Die **Verwurzelung** ist eines der wichtigsten und meistverkannten Bedürfnisse des Menschen. Ein junger Mensch, der aus der natürlichen Teilhabe seiner Gemeinschaft mit seiner Familie herausgerissen wurde, leidet daher immer Not.

Frau Eswary und Herr Arumugam Velautham haben, nachdem sie zwei Jahre hier bei uns lebten, diese Not sehr bewußt erkannt. Mit großem Engagement gründeten sie die **Essener Tamil-School** und pflegten mit viel Geduld und Einfühlungsvermögen eine Vielzahl der ursprünglichen Wurzeln junger Familien und ihrer auch hier schon geborener Kinder.
Sie schafften damit eine wesentliche Voraussetzung für unser gelungenes Zusammenleben. Dabei bezogen sie ebenfalls Jugendliche verschiedener Nationalitäten in ihre erstklassigen kulturellen Veranstalungen ein und machten diese mit ihrer liebenswerten Eigenart vertraut.

Als für unsere Jugend Mitverantwortliche sage ich dem Ehepaar Velautham und ihren Helfern verbindlichsten Dank und von Herzen gute Wünsche.

Ihre

Ria Voswinckel
Schülerschule

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

## Tamil Education Service of Germany

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

---

## வாழ்த்துரை

ஈழத்தமிழ் மக்கள், இலங்கையின் இனப்பிரச்சனை காரணமாகப் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறு தமிழ் மக்கள் ஜேர்மனியிலும் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றார்கள். ஈழத்தமிழ் மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக வாழ்ந்தாலும், அவர்கள் தங்கள் இனம், மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்குமாக ஆங்காங்கு பாடசாலைகளையும், மன்றங்களையும் அமைத்துச் செயற்பட்டு வருவதைப் பலரும் நன்கறிவர். இந்த வகையில் எசன் (Essen) என்ற மாநகரத்தில் வாழ்கின்ற தமிழ்ப் பிள்ளைகளின் தமிழ்மொழி வளர்ச்சி கருதி திரு.திருமதி. வேலாயுதம் அவர்கள் "எசன் தமிழ்ப் பாடசாலை" என்ற பெயரில் பாடசாலை அமைத்து பத்து (10) ஆண்டுகளை பூர்த்தி செய்வதை அறிந்து, மிகுந்த மகிழ்வுடன் இவ் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர் மத்தியில் இனம், மொழி, கலை, பண்பாடு, இலக்கியம் பற்றிய ஆர்வமும் வெளிப்பாடும் பல்வேறு வகையில் வெளிப்படுகின்றன. இந்த வகையில் எசன் தமிழ்ப் பாடசாலை இனத்தின் வளர்ச்சிக்கும், கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்வதை ஈழத்தமிழர்கள் யாவரும் மனதாரப் பாராட்டுதல் கடமையாகும். எசன் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், தமிழ்ப் பிள்ளைகளின் தாய்மொழி வளர்ச்சியை மனதிற் கொண்டு செயற்படுவதையும், பல போட்டிகளை நடத்துவதையும், காலத் திற்குக் காலம் கலை, பண்பாட்டுச் சமய விழாக்களைச் செய்து, இன, மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்ற தன்மையை நான் நன்கு அறிவேன். பிள்ளைகளின் மொழி, கல்வி, கலை வளர்ச்சிக்காக அவர்கள் பேச்சுப் போட்டிகள், நாடகங்கள், பரதநாட்டியம் என்பன போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றார்கள்.

எசன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள், "ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" வருடாந்தம் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில் கடந்த பல வருடங்களாகத் தோற்றிச் சிறந்த புள்ளிகளைப் பெற்றுப் பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர். "ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" நடாத்தும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகளில் எசன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பல கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்தியும் உள்ளனர்.

எசன் தமிழ்ப் பாடசாலை அமைப்பினர் தமிழின வளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் பல்வேறு வகையில் தமிழ்ப் பணிச் சேவைகளைச் செய்து மேலும் மேலும் சிறப்புற்று விளங்க என் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்.

வணக்கம்.

இங்ஙனம்,

செயலாளர்,

Einstein Str-3,
59174 Kamen.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "Der Fremdling soll bei Euch wohnen wie ein Einheimischer unter Euch..."

Grußwort des Diakoniewerks Essen

Die biblische Sicht ist ganz eindeutig: "Der Fremdling soll bei euch wohnen wie ein Einheimischer unter euch..." (3. Mose 19,34). Die Kirche und Diakonie haben es deshalb bis in die Gegenwart als ihre Aufgabe verstanden, sich dem Fremden zu öffnen, für den Schutz seiner Rechte einzutreten. Dies gilt auch in der Begegnung mit Flüchtlingen in unserer Stadt.

Wir sprechen unsere Glückwünsche den Menschen aus, die vor 10 Jahren den Verein **Tamilischer Sprachdienst- und Kulturverein e.V.** gründeten und heute in ihm mitarbeiten bzw. die Arbeit fördern.

Die Forderung, den Fremden wohnen zu lassen wie einen Einheimischen, will in konkrete Hilfe umgesetzt sein. Deshalb freuen wir uns, daß wir Ihnen über viele Jahre hinweg dadurch helfen konnten, daß Sie unsere Räume nutzen konnten. Hier konnten Sie viele jungen Mädchen und Jungen Ihre tamilische Muttersprache und Kultur weitergeben, ihnen Werte und Traditionen ihres Herkunftslandes aber auch der neuen Heimat in Deutschland vertraut machen.
Besondere Anerkennung und großen Dank gilt dem Ehepaar Velautham und ihren Mitarbeiterinnen und Mitarbeitern, die sich jede Woche Jahr für Jahr ehrenamtlich für die entwurzelten Kinder und Jugendlichen einsetzten. Sie begeisterten sie mit Spaß und Freude, Anstrengung und Ausdauer, ihre Wurzeln, wie Sprache, Geschichte und Kultur, wiederzuentdecken und zu lernen.
Kein Bereich kann auf sich allein gestellt die systembedingten Ursachen der Entwurzelung abbauen. Diese Gemeinsamkeit ist so wichtig wie auch die gemeinsame Sprache in diesem Land, in dem wir zusammen- und miteinanderleben.

Waren Sie zuerst in den Räumen der Diakonie im Haus der Evangelischen Kirche im II. Hagen, so sind Sie seit neun Jahren in den Räumen der Diakonie bzw. der Evangelischen Altstadtgemeinde in der Rottstraße, wo sonst Spätaussiedler beraten werden, die ihre deutsche Sprache, Kultur und Erziehung in den Ländern Ost- und Südosteuropas über Jahrhunderte gepflegt haben. Ihr Verein machte nicht zuletzt auch durch Einladungen zu Ihren großen Kultur- und Sportfesten öffentlich mit Erfolg auf sich aufmerksam.

Wir wünschen Ihrem Verein auch für die Zukunft Gottes Segen, viel Erfolg, engagierte Mitarbeiterinnen und Mitarbeiter und hoffen auf weitere gute Zusammenarbeit.

Ihr

**Diakoniewerk Essen**

i. A. Robert Schwichten

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APIRAAMI
## ENTERPRISE

எது தேவையோ
எது மகிழ்வோ
எது விருப்பமோ
அவற்றை
மனநிறைவுடன்
மகிழ்வுடன்
தரத்துடன்
நம்பிக்கையுடன் பெற்றிட

# அபிராமி
## என்ரர்பிறைஸ்

★ இல்லத்தேவைகள்.
★ உணவுப்பொருட்கள்.
★ ஆடை அணிகலன்கள்.
★ வீடியோ ஓடியோக்கசற்றுக்கள்.
★ அன்பளிப்புப்பொருட்கள்.
★ தொலைபேசி அட்டைகள்

Pferdemarkt 9
45127 Essen
Germany

☞ வீடியோப்படப்பிடிப்பு, புகைப்படம்.
☞ மணவறை, மாலை, மண்டப அலங்காரம்.
☞ குருக்கள் ஏற்பாடு.
☞ மதிய உணவு, மாலை உணவு, சிற்றுண்டிவகைகள்.
☞ அழைப்பிதழ்கள்.

Tel&Fax: 0201236925
Mobil: 01722089451

எங்கள் வளர்ச்சிக்கு என்றும்தேவை உங்கள் ஆதரவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்த்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"

புகலிடத் தமிழ்பேசும் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ தாம் புகலிடம் தேடிக் கொண்ட நாடுகளில் ஒரு புதிய சந்ததியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்புதிய சந்ததி எம்மிலிருந்து முற்றும் மாறுபட்டதாக எமது மொழி, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை சற்றேனும் தம்மகத்தே உட்கொள்ளாது, தாம் வாழும் நாடுகளின் மொழி, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கிய சந்ததியாக உருவாகும் ஆபத்து எம் கண் முன்னே தோன்றி நிற்கின்றது. இந்நிலை தொடர்பாக நாம் அசட்டையீனமாக இருப்போமாயின் எமது அடுத்த இளைய தலைமுறையினரை தொலைத்தவர்களாவோம்.

அவர்கள் தமது மொழி, பண்பாட்டு, காலாச்சாரத்தோடு வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை எமது தாயகத்தே தோற்றுவிப்பதுதான் இதற்கான சரியான வடிகாலாக இருக்க முடியும். ஆனால் அதற்கான எந்த முயற்சிகளையும் இதயசுத்தியோடு சரியான பாதையில் ஸ்தாபனமயப்பட்டு செய்ய நாம் எவரும் எத்தனிக்கவில்லை. சுயநல உணர்வோடு தனிமனிதர்களாக சந்திப் பிரசங்கங்கள் செய்து, வரலாற்றை பின்நோக்கி சுழற்ற முனைகிறோம் என்ற கசப்பான உண்மையை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

புகலிட நாடுகளில் வாழும் தமிழ்பேசும் மக்களில், எமது இனத்தின் மீது அக்கறை உள்ளவர்கள் எமது அடுத்த சந்ததிக்கு நாம் எதனை கையளித்து விட்டுச் செல்லப் போகிறோம் என்ற ஏக்கத்துடன் தம்மாலான பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் எமது வருங்கால இளைஞர் சமுதாயம் எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியைக் கற்பதன் மூலம் எமது பண்பாட்டுக், கலாச்சாரங்களை அறிந்து, பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை தம்மகத்தே கொண்டு, ஜேர்மனியில் ஆங்காங்கு சில அமைப்புகள் பணியாற்றி வருகின்றன. அந்த வகையில் பத்தாண்டுகள் அரும்பணியாற்றி வந்துள்ள எசன் தமிழ்ப் பாடசாலை இந்தப் பாதையில் ஒரு மைல்கல்.

குந்த வந்த இடத்தில் சொந்தம் கொண்டாட முனையும் நம்மவர் மத்தியில் தியாக உணர்வோடு சுயநலநோக்கின்றி அரசியல் கலப்பற்ற ஒரு ஸ்தாபனமாக எசன் தமிழ்ப் பாடசாலை உருவாகி பணியாற்றி வருவது பாராட்டுதற்குரியது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற பெயர்த்தல் வேண்டும்" என்று பாடிவைத்தவர் மகாகவி பாரதி. ஜேர்மன் மொழியைக் கற்று அதில் பாண்டித்தியம் பெறப் போகும் எமது மாணவக் கண்மணிகள், தமது தாய்மொழியாகிய தமிழ் மொழியையும் ஐயம் திரிபுறக் கற்றுக் கொள்வதன் மூலம் வருங்காலத்தில் தமிழ் சமுதாயத்தில் உள்ள இலக்கிய, விஞ்ஞான, சமய, மொழிச் சிறப்புகளை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்து தந்திடவும், ஜேர்மன் சமுதாயத்தில் உள்ள இதே விடயங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்துத் தந்திடவும் ஒரு பாலமாக எசன் தமிழ்ப் பாடசாலை அமைந்துள்ளது.

புகலிடத் தமிழர் வரலாறு எதிர்காலத்தில் எழுதப்படும் போது அதில் எசன் தமிழ்ப் பாடசாலை கால்பதித்த சுவடுகள் நிச்சயமாக பதிவுசெய்யப்படும். எசன் தமிழ்ப் பாடசாலையை பதிவு செய்யாது எழுதப்படும் புகலிடத் தமிழர் வரலாறு உண்மைக்குப் புறம்பானதாக, பூரணத்துவமற்றதாகவே இருக்கும்.

ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்மொழி சர்வதேச மொழியாக இருந்துள்ளது என்று வரலாறு சான்று பகர்கின்றது. சர்வதேசமெங்கும் பரவி வாழும் நாம் எமது மொழியை செழுமைப்படுத்தி, தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்ய எம்மாலான பங்களிப்புகளை ஒன்றிணைந்து செய்வோமாக.

**கே.கே.அருந்தவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LUISENSCHULE**
Das Innenstadtgymnasium
Städt. Gymnasium für Jungen und Mädchen
Sekundarstufe I und II
mit Anfangssprache Englisch oder Französisch
(Zweisprachenzug Deutsch-Französisch)

Bismarckplatz 10
45128 Essen
Telefon (0201) 221436

Luisenschule · Bismarckplatz 10 · 45128 Essen

Tamilscher Sprachdienst und Kulturverein
Velautham Arumugam
Mittwegstr. 21

45127 Essen

Ihr Zeichen / Ihre Nachricht vom

Unser Zeichen / Unsere Nachricht vom

Datum
09.09.1998

Betr.:
Grußwort

Sehr geehrter Herr Arumugam,

hiermit übersende ich Ihnen mein Grußwort für die Festschrift zum 10-jährigen Bestehen:

Die "Essener Tamil School" besteht zehn Jahre. Sie ist ein gutes Beispiel für eine gelungene Eigeninitiative. Denn sie bietet zahlreichen tamilischen Kindern eine Heim- und Lehrstätte, die dazu beiträgt, den individuellen Standort in einer fremden Kultur zu finden und die eigene Sprache und Kultur zu pflegen und zu entwickeln.
Dafür danke ich allen Organisatoren herzlich. Der Schule wünsche ich weiter Erfolg und allen Beteiligten Freude an der Arbeit.

Mit freundlichen Grüßen

Schippmann
Oberstudiendirektor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமறிந்து செயற்படுவீர்

வரலாற்றின் ஒரு காலத்தில் நாங்கள் ஐரோப்பியரின் குடியேற்ற நாடுகளாக இருந்தோம். அவர்கள் தமது மதத்தையும் மொழியையும் எங்கள் மீது திணித்தார்கள். அத்துடன் அவர்கள்தான் எமது மொழியையும் மொழியின் இலக்கியக் கருவூலங்களையும் உலகம் அறியச் செய்தார்கள். அவர்களின் வருகையால் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களே தமிழைப் படிக்கவும் தமிழை வளர்க்கவும் தமிழுக்கு தொண்டு செய்யவும் அவர்களைத் தூண்டியது. அதனால் எமது இலக்கியங்கள் அச்சு வாகனங்களில் ஏறி உலகை வலமஇ வந்தன.

இன்று; எம்மைக் குடியேற்ற நாடு என்று கூறிய ஐரோப்பிய நாடுகளிலே நாம் குடியேறி இருக்கிறோம். எமது சந்ததி எமது மொழியைக் கைவிட்டு அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்கின்றன. அம் மொழிகளில் திறமை பெறுகின்றன. இது ஒரு சிறந்த வளர்ச்சி. எங்களைப் பற்றிபேசி எங்களின் பெருமையைப் பற்றி தம்பட்டம் அடித்துக்கொண்ட எம்மவர்க்கு வெளிநாடு களில் என்ன இருக்கிறது என்ன நடக்கிறது என்பதை அறிய ஒரு வாய்ப்புக் கிடடி இருக்கிறது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிக் கிணங்க நாம் நடந்து கொள்ள வேண்டும்.

அதே நேரம் இதை ஒரு கொள்கையாக்க வேண்டும். அறிவு வளரக் கல்வி அவசியம். இக்கல்வி போதிக்கப்படும் மொழி வளமானதாக இருக்க வேண்டும். ஐரோப்பிய மொழிகள் எல்லாம் இன்றைய வளங்களைக் கொண்டவை. நவீன உலகின் வளர்ச்சிப் படிக்கு உதவும் வகையில் விஞ்ஞான தொழில் நுட்பக் கருக்களைக் கொண்டவை. ஆகவே அம்மொழிகளைக் கற்பதால் எமது பிள்ளைகளின் அறிவு வளரும். அந்த அறிவின் வளர்ச்சி நம்மவரின் உயர்வுக்கு வழிவகுக்கும். ஆகவே பெற்றார்கள் பிள்ளைகள் கற்பதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

அவர்களின் மொழிக் கல்வியில் எமது தாய்மொழியையும் ஒரு மொழியாக அவர்கள் கற்பதற்கான வாய்ப்புகளைச் செய்து கொடுப்பதே பெற்றோரின் கடமையாகும். இன்று ஐரோப்பிய பாடசாலைகளில் அந்தந்த நாட்டு மொழிகளுடன் வேறு ஐரோப்பிய மொழிகள் கற்கப்படுகின்றன. அம் மொழிகள் போன்று எமது தாய் மொழியாம் தமிழை அப்பாடசாலைகளிலேயே கற்பிக்கும் வசதியை ஏற்படுத்த பெற்றோர் பாடுபட வேண்டும். இதை நீங்கள் ஒரு சவால ஏற்க வேண்டும். முயன்றால் முடியும். அதற்கு ஒற்றுமை தேவை. நான்; நீ; அவன்; யார்? என்று பாராமல் எமது மொழியின் வளர்ச்சியில்; இனத்தின் வளர்ச்சியில் எல்லோரும் ஒன்றுபட்டு இணைந்து செயற்பட வேண்டும்.

இதை இந்நாடுகளிலுள்ள கல்வி நிறுவனங்கள்; கலாச்சார அமைப்புக்கள்; அரச அலுவலகங்கள்; தொண்டர் நிறுவனங்களுடன் சேர்ந்து அணுகி அதற்கான வழிமுறைகளைத் தேடலாம். தவறும் பட்சத்தில் இங்கு நடைபெறும் தமிழ் மொழிப் பாடசாலைகளை உரிய முறையிற் செயற்படவைத்து அவைகளின் மொழிக் கல்வியைத் தரமுடையதாக்க வேண்டும். இக்கல்வி நிறுவனங்களை இந்நாட்டின் சட்ட வரைவுகளுக்குள்ளாக்கி அதனை ஏற்புடையதாக் கினால் எமது எதிர்காலச் செல்வங்களுக்கு ஏற்ற மொழிக்கல்வியும் அதன் பயன்பாடும் கிட்டும். இதுவே இன்று இங்குள்ள அறிஞர்களுக்கும் கல்விமான்களுக்கும் தொண்டர்களுக்கும் பாரிய பயன்பாடான பொறுப்பாகும். இதை மனதில் இருத்தி செயற்படவேண்டும் என்பதை எல்லோரும் ஏற்பார்கள். "ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்."

ஆ.வேலாயுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Komplettservice und Know-How rund um die Kopie.

Copy-Shops findet man an "jeder Ecke".

Wenn Sie aber das Besondere suchen, liegen Sie bei apex genau richtig...

apex

COPY

DIGITAL

FINISH

CANON

Vereinstraße 20
45127 Essen
fon (0201) 243579-10
fax (0201) 243579-13

- CLC 1000
Farbkopien in Auflage
ab 0,55 DM
- Farbkopien bis DIN A0
- DocuTech
Digitale S/W-Schnelldrucke
ab 0,05 DM
- S/W-Großkopien
Breite 90 cm x "endlos"
- Digital-Ausdrucke
von Mac- und PC-Dateien
bis 150 cm x "endlos"
- DTP- und EBV-Service,
Scans bis DIN A0, CAD-Plots
- Finish
Bindesysteme (Leim-,Spiral-, Klebe- und Kammbindungen), laminieren, kaschieren, falzen, heften, schneiden
- Textildruck
T-Shirt-Prints, Puzzle- und Mousepaddruck


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Danksagung

Heute haben wir Gelegenheit, allen Dank zu sagen, die unsere Arbeit mit den Kindern und Familien unterstützt haben, sowie auch allen, die uns ihre Grußworte zum **10jährigen Bestehen der "Essener Tamil-School"** freundlichst zugesandt haben. Wir veröffentlichen sie zusammen mit unserem verbindlichsten Dank in dieser Festschrift nach zehnjähriger erfolgreicher Arbeit. Besonderer Dank gebührt den Institutionen, die unsere Arbeit überhaupt erst ermöglicht haben, indem sie uns Räume dafür zur Verfügung stellten.

Ebenso möchten wir den tamilischen Familien danken, die einen enormen Einsatz für unsere aufwendigen Kulturfeste erbrachten. Wir hoffen, dass Sie uns weiterhin mit Ihrer Hilfe zur Seite stehen und wünschen uns auch für die Zukunft Ihre tatkräftige Mitarbeit.

## நன்றி நவிலல்

நன்றி மறப்பது நன்றன்று என்ற வாக்கிற்கமைய இந்த 10 ஆண்டுகளும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் உற்சாகமுமூட்டி வாழ்த்துக்களும் ஆசிகளும் அளித்து எமது மலரை மலரச் செய்த அனைத்து அமைப்புக்களுக்கும் அன்பான நண்பர்களுக்கும் முதற்கண் நன்றி.

எமது பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சிகளாக பேச்சுப் போட்டி; சித்திரப் போட்டி; விளையாட்டு போட்டி; கலாச்சார விழா ஆகிய வற்றிற்கு நேரத்தையும் தூரத்தையும் சிரமங்களையும் பாராது கைமாறு கருதாது உதவிகள் நல்கி உற்சாகம் அளித்தவர்களுக்கும் ஒலி; ஒளிப்படங்களுக்கு உதவி நிகழ்ச்சிகள் சிறக்கப் பாடுபட்டு உழைத்தவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மற்றோருக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறி உவகை கொள்கிறது.

Tamilischer Sprachdienst und
Kulturverein e.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசன் தமிழ் பாடசாலை 10வது ஆண்டு விழா
சிறப்புற மனமார வாழ்த்தும்

# மம்மிடடி நிறுவனத்தார்

**தித்திக்கும் நம்நாட்டு உணவு வகைகளுக்கு
உங்கள் நினைவில் நிற்பவர்கள்**

அன்றும்

இன்றும்

என்றும்

## மம்மிடடி

திருமணவைபவமா, பூப்புனிதநீராட்டு விழாவா, பிறந்தநாள் விழாக்களா உங்கள் எண்ணம் போல் தரமான சுவையான சைவ, அசைவ உணவுகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

மம்மிடடி

மற்றும் வீடியோ, நிழற்படம், மணவறை, மணமாலை யாவும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.

மம்மிடடி

தொடர்புகளுக்கு
**Mammi Dadi**
**Pizzeria a Asian Imbiss**
**Stoppenberger Str. 24**
**45141 Essen**
**Tel 0201-313040**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றில் அரிது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org